பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 05 புதன்கிழமை (22.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 267

# பலாலிப் படைத் தளத்தின் மீது புலிகள் ஆட்லறித் தாக்குதல்!

## முறியடித்ததாக இராணுவம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

பலாலிப் படைத் தளம் மற்றும் காங்கேசன்துறை, மயிலிட்டி கடற்படை முகாம்கள் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் கடும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

எனினும், பதில் தாக்குதல் நடத்தி அவற்றைத் தாம் முறியடித்துவிட்டதாக இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

குடாநாட்டின் தெற்குப் பகுதியிலிருந்து - பூநகரியிலிருந்து- தொடுக்கப்பட்ட புலிகளின் ஆட்லறித் தாக்குதல்களின் போது - பலாலித் தளச் சுற்றாடலில் பத்துச் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்றும் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளவிலிருந்தே புலிகள் தமது தாக்குதல்களை ஆரம்பித்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

மொத்தம் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட ஷெல்கள் பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறைப் பகுதிகளில் விழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை, சுமார் 7.30 மணியளவிலும் பலாலி படைத் தளம் மீது தமது ஆட்லறி எறிகணைகள் விழ்ந்து வெடித்தன எனப் புலிகளின் இராணுவத்துறைப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

"இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எத்தனை படையினர் கொல்லப்பட்டனர் என்பது குறித்தோ, படைத் (08 ஆம் பக்கம் பார்க்க)

# தொடர் ஷெல் சத்தங்களால் குடாநாடு முழுவதிலும் மக்கள் நேற்று ஒரு மணிநேரம் பீதியில் உறைந்தனர்!

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.நகரப் பகுதி உட்பட யாழ்.குடாநாடு முழுவதும் நேற்றுக்காலை சுமார் 45 நிமிட நேரமாக ஷெல் சத்தங்களினால் அதிர்ந்தது. திடீரெனத் தொடர்ச்சியாகக் கேட்ட தாங்க முடியாத கர்ண கொடூரமான சத்தங்களால் மக்கள் பதற்றமடைந்தனர். என்னவோ ஏதோ, போர் தொடங்கிவிட்டதோ என்ற பதற்றத்துடன் பீதியில் உறைந்தனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் காலை சுமார் 8.30 மணியளவில் வழமையான பல்குழல் ஷெல் வீச்சுச் சத்தம் கேட்டது. ஆனால் நிமிடங்கள் செல்லச் செல்ல கடும் ஓசைகள் காதைப் பிளந்து மக்களின் நெஞ்சைப் பதற வைத்தது.

சுமார் 8.45 மணி தொடக்கம் 9.35 மணிவரை மிக அருகில் இருந்து பல்குழல் வீச்சுச் சத்தங்கள் கதறிக்கொண்டு சென்றதால் நடந்தது என்ன என்று தெரியாது மக்கள் அச்சம் அடைந்தனர். கதி கலங்கினர்.

கடும் ஷெல் வீச்சு நடந்த வேளையில் நகரில் வாகனங்களில் பயணம் செய்தவர்களும் சைக்கிள்களில் சென்றவர்களும் வீதிகளில் சென்ற பாதசாரிகளும் வீதிகளில் படுத்தும் விரைந்து ஓடியும் பாதுகாப்புத் தேடி அல்லோலகல்லோலப் (08 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி-இரத்மலானை விமான சேவைகள் ஷெல்தாக்குதலால் நேற்று நிறுத்தம்

## பயணிகள் அவசரஅவசரமாகக் கூட்டிவரப்பட்டனர்

யாழ்ப்பாணம்,ஓக.22

பலாலி - இரத்மலானை பயணிகள் விமான சேவைகள் நேற்று இடம்பெறவில்லை.

சேவையில் ஈடுபடும் இரு தனியார் விமான சேவைநிறுவனங்களும் பயணிகளை பலாலிக்கு அழைத்துச்சென்ற வேளையிலேயே ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஒரு விமான சேவையின் பயணிகள் பலாலியில் உள்ள பயணிகள் சோதனையிடும் நிலையத்தில் இருந்தபோது அங்கு திடீரென ஷெல்கள் வீழ்ந்தன. அதனால் பதற்றமுற்ற பயணிகள் அங்குள்ள பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்புத்தேடி பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். அவர்கள் ஒருவாறாக மீளவும் பாதுகாப்பாக யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

மற்றையவிமானசேவையின்பயணிகள் பலாலி நுழைவாயிலில் (கட்டுவன்) சோதனை நிலையத்தில் தங்கியிருந்தனர். திடீர் ஷெல் தாக்குதலை அடுத்து அவர்கள் ஒருவாறாக (08 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பகுதியில் 'கிபிர்' தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.வான் பரப்பில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் வட்டமிட்ட கிபிர் விமானங்கள் பூநகரிப் பகுதியில் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதம் குறித்து நேற்றிரவுவரை தகவல் வெளியாகவில்லை.

*5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளும் விடைகளும் உள்ளே.*

# வவுனியா தம்பனையில் ஷெல் வீச்சு 3 படையினர் பலி; 10 பேர் படுகாயம்

கொழும்பு,ஓக.22

தம்பனைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய ஷெல் வீச்சில் 3 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா - மன்னார் வீதியிலுள்ள தம்பனையில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ நிலைகள் மீதுநேற்று முற்பகல்9.30 மணிக்கு விடுதலைப் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

இதில் இராணுவத்தைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர். 10 இராணுவத்தினர் படுகாயமடைந்து அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களின் படுகொலையை அடுத்து

# டெனிஷ் கண்ணி அகற்றும் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் பணிகளை நிறுத்தியது

கொழும்பு, ஓக.22

யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டுவந்த கண்ணிவெடி அகற்றும் பணியை தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளதாக டெனிஷ் கண்ணி அகற்றும் நிறுவனம் நேற்று அறிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டேவிட் பெட்லன்ஸன் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு

## நேற்றும் கூடிக் கலைந்தது

கொழும்பு, ஓக.22

"அரசுடன் இணைந்துள்ள கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பை மேற்கொண்ட பின்னரே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்று முன்னைய கூட்டத்தில் உடன்பாடு கண்ட விடயத்தை உடன் நடைமுறைப்படுத்துங்கள். அதுவரை இச் சந்திப்பு அவசியமற்றது."

- இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர் பேராசிரியர் நளின்த டிசில்வா தெரிவித்தார்.

இதனால் நேற்று 3.30 மணியளவில் கூடிய அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் கூட்டம் 5.30 மணியளவில் கலைந்தது எனத் தெரியவந்தது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி விலக முடிவு

கொழும்பு, ஓக.22

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி விலகியுள்ளது என அறிவித்திருக்கின்றது. இதேவேளை, அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழு நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் சரியான ஒரு தீர்வை முன்வைக்குமானால், தமது கட்சி அதற்கு ஆதரவளிக்கும் என்றும் ஐ.தே.கட்சியின் நிர்வாகக்குழு நேற்று ஏகமனதாக முடிவெடுத்திருக்கின்றது என கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- (08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தரம் 5 புலமைப்பரிசில் வினாத்தாள் II இன் விடைகள்

01. இரவுவேளை/ இரவுக்காலம். 02. பூத்துணிபோல்.
03. செய்மையில். 04. கடல்/ஆழி/பரவை/சாகரம்.
05. கற்பாறையை 06. அவை.
07. ஒன்றைப்பற்றி பூரணமானத் தெரிந்துகொள்ளாமல் அதில் ஈடுபடக்கூடாது. ( இதுபோல வேறும். )
08. எப்போதும் கோபப்படுபவனது செயல் நிறைவானதாக இருக்காது. ( இதுபோல வேறும். )
09. 1) நூலகம். 2) மாணவன். 3) வழக்கு. 4) விமானம்.
10. நண்பி பாட்டுப் பாடினாள். 11. !
12. செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகை பிரதா இடம் வகிக்கின்றது. ( வேறு முறையில் வராது. )
13. அஹிம்சை. 14. 1) Kite 2) Parrot
15. நான் பசித்திருக்கிறேன்/நான் பசியுடன் இருக்கிறேன்/ எனக்குப் பசிக்கிறது.
16. What is your name?
17. இங்கே வா/ இங்கே வாருங்கள்/ இவ்விடம் வா. 18. கிரி பொன்ன.
19. 3 20. 1 21. 1 22. 4 23. 2
24. 3 25. 2 26. 1 27. 2 28. 2
29. 3 30. 2 31. 2 32. 1 33. 1
34. 2 35. 1 36. 3 37. 2 38. 2
39. 4 40. 2 41. 3 42. 4
43. சந்திரவட்டக்கல். 44. சிகிரிய ஓவியம்/ சிகிரிய பெண் ஓவியம்.
45. 1) எல்லே. 2) கிரிக்கெற். 46.




47. 1) 15 மாணவர்கள்.
2) 15 மாணவர்கள்.
3) படத்தில் நிழற்றுக.
4) 145 மாணவர்கள்.
48. 13
49.



இந்த 6 முறைகளும் பொருந்தும்.

50. 303km 51. ருபா59சதம்50 52. 27kg750g 53. 4l 500ml
54.




55. ருபா 2100.00
56. 0.2
57. 108 பேருக்கு.
58. 32m
59. 1) மழை பெய்ய பெய்ய மழை நீரை பூமி உறிஞ்சிக்கொண்டே இருக்கின்றது.
2) பூமித்தாயின் நெடுநாள் தாகம் தீரும் வரையில் பூமி உறிஞ்சிய மீதி நீர் ஆங்காங்கே தேங்கி நிற்கின்றன.
3) குளங்களிலும் குட்டைகளிலும் கிணறுகளிலும் சிறிதளவு நீரே தேங்கி நிற்கின்றன.
4) இருப்பினும் பூமியில் நிலவிய வெப்பம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது.
5) ஓரளவு குளிர்ச்சி பொருந்திய காற்று மக்களின் மனங்களை மகிழ்ச்சிப்படுத்திக் கொண்டிருந்தது.
6) மழை பெய்துகொண்டிருந்தபடியால் மக்கள் சற்றுப் பெருமூச்சு விடத் தொடங்கினர்.


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 10 . 1939



மறைவு 06 . 08 . 2003

### திருமதி தியாகரராசா பாக்கியம்

(பலகாடு, காரைநகர்., சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்)
திதி: பூர்வபக்க நவமி

அன்னையைப் போலொரு தெய்வமும் இல்லை
அவளின் கடன் தீர்க்க எத்தனை பிறப்பு
பிறந்தாலும் தீர்க்க முடியாது

உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மணற்காட்டு அம்மனின் தாழ் பணிந்து வேண்டுகின்றோம்.

முருகன் வீதி, திருநெல்வேலி. (63996) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 02 . 07 . 1964



மறைவு 23 . 07 . 2007

### அருளம்பலம் அருளானந்தம்

( உரிமையாளர், முருகன் பேக்கரி)

பாதி வழிதனில் தவிக்கவிட்டு
நீண்ட தூரம் சென்றதேனோ!
வழி தெரியாமல் கலங்குகின்றோம்
மீண்டும் எமைக்காண வாராயோ?

கடந்த 23.07.2007 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எமது தெய்வத்தின் 31ஆவது நினைவு நாள்நிகழ்வு இன்று (22.08.2007) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இந் நிகழ்விலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

துணவி சந்தி, வட்டுக்கோட்டை. (63999) - குடும்பத்தினர்.




அல்லைப்பிட்டிப் பகுதியில் கடந்த ஆண்டு காணாமற்போன பங்குத்தந்தை அருட்திரு ஜிம்பிறவுண் அடிகளாரின் ஒருவருட நினைவு நாள் நேற்றுமுன்தினம் குடாநாட்டில் நினைவுகூரப்பட்டது.

யாழ். மரியன்னை பேராலய முன்றிலில் அனுஷ்டிக்கப்பட்ட அடையாள உண்ணாவிரதத்தின்போது கலந்து கொண்ட பொதுமக்களில் ஒரு பகுதியினரையும் அருட்தந்தையர்கள் மற்றும் அருட் சகோதரிகளையும் படங்களில் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

# ஜிம்பிறவுண் அடிகளார் குறித்த விசாரணையை உடன் மேற்கொள்ள அரசிடம் வலியுறுத்து

கடந்த வருடம் அல்லைப்பிட்டியில் இராணுவச் சோதனைச் சாவடியருகில் காணாமற்போன பங்குத்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார் தொடர்பான விசாரணைகளை உடன் உரியமுறையில் மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட பொதுஅமைப்புகளின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டிற்கான ஏ-9 தரைவழிப்பாதை மூடப்பட்டதைத் தொடர்ந்து இங்குள்ள மக்கள் மீதான படுகொலைகள், ஆள் கடத்தல்களும் காணாமற்போதல்களும் எல்லைமீறிப் போய்கொண்டிருக்கின்றன.

கடந்த ஒரு வருடத்தில் 900 இற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டும் 1000 மேற்பட்ட மக்கள் காணாமற்போயும் 100 இற்கும் மேற்பட்ட மக்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துமுள்ளனர்.

குறிப்பாக கடந்த 16 நாள்களில் இரண்டு மாணவர்கள் இரண்டு அரச ஊழியர்கள் உட்பட 15 பொதுமக்கள் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 18 பொதுமக்கள் கடத்திச்செல்லப்பட்டுள்ளனர். 12 பொதுமக்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக மனித உரிமை ஆணைக்குழுவில் பாதுகாப்புத் தேடிச் சரணடைந்துள்ளனர். மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்த இரண்டு பொதுமக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. இக்கொலைகள் தொடர்பாக எவரும் வாய் திறக்க முடியாமல் அடக்கப்படுகின்றனர். கடத்தல் தொடர்பாகவோ கொலைகள் தொடர்பாகவோ எங்கும் முறையிடக்கூடாதென மக்கள் ஆயுத முனையில் மிரட்டப்படுகின்றனர்.

இந்நிலையில் இராணுவப் பேசாளர் குடாநாட்டில் இடம்பெறும் கொலைகளுக்கும் கடத்தல்களுக்கும் இராணுவத்தினருக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்பதை நாம் முற்றாக மறுக்கின்றோம்.

குறிப்பாக கடந்த 20.08.2006 அன்று அல்லைப்பிட்டிப் பகுதியில் இராணுவச் சோதனைச் சாவடியருகே காணாமற்போன பங்குத்தந்தை ஜிம்பிறவுண் அடிகளார் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக ஒரு வருடமாகியும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படாமையையும் அது தொடர்பான உரிய விசாரணைகள் நடத்தப்படாமை தொடர்பாகவும் எமது பலத்த கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம். மக்களுக்காக காணாமற்போய் இன்று காணாமற்போன, கொலை செய்யப்பட்ட மக்களின் சாட்சியாக விளங்கும் ஜிம்பிறவுண் அடிகளாரின் நினைவுகளோடு தொலைந்துபோன உறவுகளின் விடுதலைக்காகவும் படுகொலைகளுக்கெதிராகவும் கடத்தல்களுக்கெதிராகவும் அணிதிரளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம். - என்றுள்ளது.

# ‘மிக்’ கொள்வனவு ஊழல்கள் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு

## சபையில் நேற்றுப் பிரதமர் உறுதி அளித்தார்

கொழும்பு, ஓக.22

பாதுகாப்புப் படையினரின் பாவனைக்கு ஏற்கனவே காலாவதியானதும் தரம் குறைந்ததுமான ‘மிக்’ விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படும் எனப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் உறுதியளித்தார்.

நேற்றுக்காலை நாடாளுமன்றம் கூடியபோது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான ஜோஸப் மைக்கல் பெரேரா, இன்றைய அரசினால் மேற்கொள்ளப்பட்ட ‘மிக்’ விமான கொள்வனவில் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன என முன்வைத்த குற்றச்சாட்டிற்கும், இக்குற்றச்சாட்டுத் தொடர்பாக ஜே.வி.பி. உறுப்பினர் விமல்வீரவன்ஸ தெரிவித்த கருத்துகளுக்கும் பதில் அளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

சபையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளும், வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளும் மிகவும் பாரதூரமானவை. எனவே உண்மை நிலையைக் கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே நாடாளுமன்ற உறுப்பினர் ஜோஸப் மைக்கல் பெரேராவின் குற்றச்சாட்டு தொடர்பாக ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் எனப் பிரதமர் உறுதியளித்தார்.

இவ்விடயம் தொடர்பாக ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ கூறியவை வருமாறு:-

முதலாவதாக, பாவனைக்கு உதவாததும் ஏற்கனவே காலாவதியானதுமான ‘மிக்’ விமானங்கள் நாடாளுமன்றின் அங்கீகாரம் இன்றி தனிப்பட்ட ஒரு குழுவினரால் கொள்வனவு செய்யப்பட்டமை உண்மையானால், புலிகளை அழிக்கப்போகிறோம் என்று கூறிக்கொண்டு சிலர் தமது ‘பொக்கட்டுகளை நிரப்பியபடி’ தேசிய நிதியை கொள்ளையடிக்கின்றார்கள் என்றே அர்த்தம்.

சம்பந்தப்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, இக்குற்றச்சாட்டு தவறானதாக இருப்பின் நாட்டைக்காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பாதுகாப்புப் படையினரின் தூய்மையான சேவையை [illegible] தாக இக்குற்றச்சாட்டுகள் அமைவதுடன், படையினருக்கும் அது பெரும் உளத்தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே, இதில் எது உண்மை, எது தவறு என்பது கண்டுபிடிக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமித்து, உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.


## மரண அறிவித்தல்கள்

### மாரிமுத்து சிவராசா

அளவெட்டிவடக்கு, செட்டிச்சோலையைப் பிறப்பிடமாகவும் நல்லூர், முருகேசர் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவராசா 20.8.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து - பார்வதி தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் மருமகனும் தேவராணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சிவதேவதாசன் மற்றும் கிரிதாஸ், சதீஸ், திலீபன் ஆகியோரின் பாசமிகுதந்தையும் காலஞ்சென்றவர்களான கந்தையா, கிருஸ்ணபிள்ளை, நவரெத்தினம், இரட்ணராஜா மற்றும் தனலக்குமி, இராசலக்சுமி, செல்வநாயகம், ஜெயலக்சுமி ஆகியோரின் சகோதரனும், ஜெனார்த்தனியின் பாசமிகு மாமனும் ஜெய்காஷின் பேரனும் காலஞ்சென்ற தவபாலசிங்கம் மற்றும் சிவானந்தசிங்கம், கிருஷ்ணகுலசிங்கம், சுவர்ணராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் நேற்று (21.08.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (63997) தகவல்: சதீஸ் (மகன்) (மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்).

### கணபதிப்பிள்ளை திருச்செல்வவிநாயகமூர்த்தி (மூர்த்தி மாஸ்ரர்)



பிள்ளையார் கோயில், மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை திருச்செல்வவிநாயகமூர்த்தி (ஓய்வுபெற்ற உப அதிபர் - மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயம்) 20.08.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மகனும் முருகேசு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் வள்ளியம்மையின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன், சுந்தரேஸ்வரி, கருணாகரன் ஆகியோரின் தந்தையும் அனுசன், குமரன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(22.08.2007) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருகோணமலை, இல.06, மத்திய வீதி, உவர்மலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருகோணமலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி, மாதகல். (63998) தகவல்: மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ. சாதாரண மாணவர்களுக்கு இருநாள்கள் தென்மராட்சியில் ஆங்கில பாடக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஆங்கில பாட வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்தினால் வழிகாட்டல் கருத்தரங்குகள் எதிர்வரும் 26ஆம்,, 27ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு நிலையத்திலும் மூன்று அல்லது நான்கு பாடசாலைகளின் மாணவர்களை ஒன்றிணைத்து கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

கருத்தரங்குகளில் பங்குபற்றும் மாணவர்களை எழுதுகருவிகள், எழுதும் தாள்கள் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் - 27ஆம் திகதி கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், நாவற்குளி மகா வித்தியாலயம், மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோ தய மகா வித்தியாலயம், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், அல்லாரை அ.த.க. பாடசாலை, கச்சாய் அ.த.க. பாடசாலை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம், நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (203-207)

# ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் கொட்டப்படும் கழிவுகளால் சிரமம்



கழிவுகளால் நிரம்பியுள்ள வீதி

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை யில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளால் அப்பாதை யால் பயணஞ் செய்பவர் கள் பெரும் அசௌகரியங் களை எதிர்கொள்கின்ற னர்.

கடந்த பல நாள்களாகக் கொட்டப்பட்ட கழிவுக ளால் அப்பாதையில் வானங் கள் செல்ல முடியாதது டன் சுகாதாரச் சீர்கேடுகளும் நிலவுகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும் என பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (202-68)

# இலங்கை வங்கி ஆளணி உதவியாளர் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கை வங்கியின் பயிற்சி ஆளணி உதவியாளர் பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் கூடுதல் புள்ளிகள் பெற்று தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்தமாதம் 5ஆம் திகதிமுதல் 8ஆம் திகதிவரை வங்கியின் வட பிராந்திய அலுவலகத்தில் நடத்தப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று உதவிப் பொதுமுகாமையாளர் தெரிவித்துள்ளார். (203)

# கிராம சேவை அதிகாரிகள் விரைந்து நியாயமாக சிபாரிசு செய்யவேண்டும்

## சமூக சேவை அமைச்சர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 22

பொதுமக்களது தேவைகள் தொடர்பாக நியாயமானதும் கௌரவமானதுமான சிபாரிசுகளை முன்வைக்க கிராமசேவை அதிகாரிகள் முன்வரவேண்டும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

குடாநாட்டில்நிலவிவருகின்ற அசாதாரண சூழ்நிலையில் பொதுமக்கள் தங்களது பல்வேறுபட்ட தேவைகள் தொடர்பில் அரச தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாடிவரும்போது அவர்களின் தேவைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டி உள்ளது.

நியாயமான வகையிலும் கௌரவமான முறையிலும் கூடிய விரைவிலும் தங்களது சிபார்சுகளை வழங்க கிராம சேவை அதிகாரிகள் முன்வந்தால் குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளில் பலவற்றை இலகுவாகவும் நியாயமாகவும் தீர்த்து வைக்க முடியும் என அமைச்சர் கருகின்றார் -என்று அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆஸ்பத்திரிகளுக்கு மருத்துவ உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கான 50 மெற்றிக்தொன் மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் கப்பல் மூலம் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றைப் பிரித்து வைத்திசாலைகளுக்கு அனுப்பும் பணி தற்போது நடைபெற்று வருவதாக யாழ். சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# பதவி வெற்றிடம் : விண்ணப்பியுங்கள்

யாழ்ப்பாணம், ஓக. 22

பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் ஆவண உதவியாளர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சை கொழும்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு 18 வயதுக்கும் 45 வயதுக்கு உட்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணிதம், மொழி உட்பட மூன்று பாடங்களில் திறமைச் சித்தி பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 10.08.2007 இல் வெளியான அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (202-86)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக. 22

நெல்லை ஆனந்தராணியின் 'எதிர்பார்க்கைகள்' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கட்டைவேலி ப.நோ. கூட்டுறவுச் சங்க அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கூட்டுறவுச் சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாநிதி செ. குணராசா கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைப்பார். நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ரீ. கலாமணி நிகழ்த்துவார். (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 22

யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய பொதுநோக்கு மண்டபம், புலோலி ப.நோ.கூ. சங்க அல்வாய் வடக்கு கிளை ஆகியவற்றின் திறப்புவிழா எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் மு. இராஜவரோதயன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யு.என்.டி.பி. தலைமை அதிகாரி க. றஞ்சன் கலந்துகொள்வார். நிகழ்வுகள் இளங்கோ விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. (203)

* * *

யாழ்ப்பாணம், ஓக. 22

சுழிபுரம் மேற்கு பாரதி கலாமன்ற பாரதி முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சுழிபுரம் கதிர்வேலாயுத சுவாமி ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. குகநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக சங்கானை சிவப்பிரகாச ம.வி. ஆசிரியர் அ. சந்திரகுமாரன் கலந்துகொள்வார். (203)

# யாழ். பஸ் நிலையம் முன்பாக வாடகைக் கார்களை நிறுத்தி வைக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ். போதனா வைத்தியசாலையின் முன்பாகவும் யாழ். பிரதான பஸ் நிலையத்திற்கு முன்பாகவும் தொழில் நிமித்தம் வாடகைக் கார்களை நிறுத்தி வைத்திருப்பதற்கு நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்படி வாடகைக் கார் சங்கத்தின் பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து தங்களது வாடகைக் கார்களை யாழ். வைத்தியசாலைக்கும், பிரதான பஸ் நிலையத்திற்கும் முன்பாக நிறுத்தி வைப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதால் தொழில் ரீதியில் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் தங்களது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதி செய்து தருமாறும் கேட் டுக்கொண்டனர்.

இவர்களது கோரிக்கை தொடர்பில் அமைச்சர் உடனடியாக பாதுகாப்புத் தரப்பின் உயர் அதிகாரியை அழைத்து கலந்துரையாடியதன் பயனாக வாடகைக் கார்களை யாழ். வைத்தியசாலைக்கும், பிரதான பஸ் நிலையத்திற்கும் முன்பாக நிறுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக. 21

நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் ஐந்தாம் நாளான இன்று புதன்கிழமை 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் இ. ஸ்ரீதரன் சொற்பொழி வாற்றுவார்.

சீரணி நாகம்மாள் அறநெறிப் பாடசாலை, கொக்குவில், தலையாளி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

* * *

வருடம் தோறும் இடம்பெறுவதுபோல் இம்முறையும் ஆலய வீதியில் அமைந்துள்ள துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் நண்பகலில் அன்னதான நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.(203-79-111)

# பெருந்திருவிழா பத்திப்பாக்கள்

## புதன்கிழமை



பதமலர் போற்று மடியவர் தம்மைப் பரிவுடனே
இதமுடன் காக்குங் குருமணி யேயெழில் சேர்முருகா
சதமுனை யன்றி ஒருவரு மில்லையித் தாரணியிற்
புதனெனும் வாரம் வருவாய்நல் லூரில் வாழ் புண்ணியனே!

நல்லை நகர்ப்பதியை நாடியே நாள்தோறும்
எல்லையிலாக் காவடிகள் ஏந்திவரும் - நல்லடியார்
காவடிக் கந்தனெனுங் காரணப்பேர் சூட்டினார்
சேவடிக்கே சேருஞ் சிறப்பு.

*அமரர் வேலணை சி. இராசரத்தினம்*

## நாடியோர்க்கு நலமளிக்கும் நல்லூரான்

*ஆடிவரு மயிலேறு ஆறுமுகா முருகா*
*நம் அவலங்கள் அடியோடு மண்ணிலே மறைய*
*கோடிமுறையுனைப் பணிந்தோம் கோமகனே முருகா*
*கொண்டவள்ளி தெய்வானை மணவாள குமரா*
*பாடியுன் பாதம் பணிந்தோம் பாலகா வேலவா*
*பக்தர்களின் குறைதீர்க்கும் பாங்கான நாயகா*
*தேடியோர் நின்னருள் பெற்றுப் போற்றி*
*நாடியோர்க்கு நலமளிக்கும் நல்லூரானும் நீயன்றோ!*

க. நாகேஸ்வரா.



கலை இலக்கிய இருதிங்கள் ஏடான "ஜீவநதி" சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் தேவரையாளி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. எழுத்தாளர் செங்கையாழியானிடமிருந்து லயன் ஜி. கண்ணதாசன் முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வதையும், பிரதம ஆசிரியர்களான சி. விமலன், க.பரணீதரன் ஆகியோரும் நிர்வாக ஆசிரியர் து. ராஜவேல், விழாவுக்குத் தலைமை வகித்த எழுத்தாளர் தெணியான் ஆகியோரும் [illegible] காணப்படுகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Calling for Quotation

The Director, Teaching Hospital ,Jaffna is calling for sealed quotation from suitable registered suppliers of Air conditioners for supply and installation at this hospital *up to 5/9/2007* till 10.00a.m.

The detail of the air conditioners required are as follows:

1. Size of airconditioner -18000 BTU Split type - 04 Nos.
2. Warranty period
3. After maintenance service

The suppliers should transport the air conditioners on their own from Colombo.

Dr.A.E.Gnanajothy
**GENERAL HOSPITAL (TEACHING) JAFFNA.** (C.53416)


## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

*மலர்வு* 19 . 07 . 1982



*உதிர்வு* 06 . 08 . 1992

## செல்வி சர்விழி தம்பிராசா

(ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை மாணவி)
*திதி: நவமி 22.08.2007*

ஆறாத்துயரில் நாம் மூழ்கி
ஆண்டுகள் பதினைந்து ஆயினவே!
ஆறவில்லை எம் நெஞ்சத் துயரங்கள் நீவிரோ
அயராது எம் விழிகள்
ஆண்டுகள் ஆயிரமாயினும்.

*என்றும் உன் நினைவுகளுடன்:*
அப்பா, அம்மா,
அக்காமார், அண்ணாமார்,
அத்தான்மார், பெறாமக்கள்.

*கோட்டைக்காடு, மல்லாகம்.* (63988)


# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 40% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| **Diploma in Computer Science** 4 Months ~~8,250/=~~ 1,650/= | **Honours Diploma in Computer Science** 5 Months ~~10,500/=~~ 2,100/= | **Diploma in Web page Designing** 4 Months ~~8,250/=~~ 1,650/= |
| **Diploma in Graphic Desining** 4 Months ~~8,250/=~~ 1,650/= | **Diploma in Desktop Publishing** 4 Months ~~7,250/=~~ 1,450/= | **Diploma in Hardware Engineering** 3 Months ~~7,250/=~~ 1,450/= |
| **Diploma in Auto CAD** 3 Months ~~7,250/=~~ 1,450/= | **Diploma in Microsoft Office** 3 Months 1,000/= | **Accounting Package** 3 Months ~~8,250/=~~ 1,650/= |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 24/08/2007 - 9.00AM
Batch II : 25/08/2007 - 11.00AM
Batch III : 26/08/2007 - 11.00AM
Batch IV: 29/08/2007 - 2.00PM

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி. September 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் செல்வரத்தினம் பிரதீபன்

(மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவனும், தேசிய கல்வியியற் கல்லூரி மாணவனும்)



**பிறப்பு 29.05.1985** **இறப்பு 25.05.2007**

அன்னாரின் மறைவை அறிந்து எமக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறியும், உதவி ஒத்தாசைகள் புரிந்தும், இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு எமக்கு சகல வழிகளிலும் உதவி நல்கியவர்களுக்கும், இதில் குறிப்பிடத்தவறியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (22.08.2007) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊற்றுக்குளி,
நாச்சிமார் கோயிலடி, நவாலி வடக்கு,
மானிப்பாய். (63994)

க. செல்வரத்தினம் குடும்பத்தினர்.

### கருத்தரங்கு

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத் துறைக் கலை வட்டம் நடத்திவரும் கருத்தரங்குத் தொடரில் நாளை பி.ப 1 .30 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் 'இராக மாலிகை ஓவியங்களிலிருந்து இராகமும் வர்ணமும்' என்னும் தலைப்பில் செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்களின் கருத்துரை இடம் பெறும். (203)

## உள்ளூராட்சி வார போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஓக.22

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி சாவகச்சேரி நகர சபையினர் பாடசாலை மாணவர்களிடையே பல்வேறு போட்டிகளை நடத்தினர். போட்டிகளில் வெற்றிபெற்றவர்களின் விவரம் வருமாறு -

**கீழ்ப்பிரிவு**

**உறுப்பெழுத்து** - இ.தர்மினா(நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தி.), அ.தேனுஜா (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி),ந.பானுகா (சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை).

**சொல்வதெழுதுதல்** - சி.சோபனா(கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி), சி.கார்த்திகா (சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை), சி.கிருஷிகா(சாவகச்சேரி இ.ஆ.பாடசாலை ), அ.தேனுஜா(சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

**மத்திய பிரிவு**

**கட்டுரை** - தெ.தாட்சாயினி, (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), த.அருள்பிரியா(சாவகச் சேரி மகளிர் கல்லூரி), ஜோ.ஜெயந்தி (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

**பொது அறிவு** - நா.கோதன்யா(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), த.தாரகா(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), க.கார்த்திகா (சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி).

**மேற்பிரிவு**

**கட்டுரை** - அ.சுவேதகி(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), ஜெ.ஜெயதர்சினி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பா.பகீரதி(சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

**பொது அறிவு** - கு.கஸ்தூரி(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.கபிலக்சன்(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), வ.சரவணபவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி). (202-207)

## மானிப்பாயில் பங்கீட்டு அட்டைக்கு உப்பு

நவாலி,ஓக.22

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு அரைக் கிலோ உப்பு வழங்கப்படுகின்றது.

இதேவேளை, சகல ப.நோ.கூ. சங்கக் கிளைகளிலும் ஒரு கிலோ உப்பு வழங்குமாறு அரச அதிபர் அண்மையில் அறிவிப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-100)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஓக.22

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவு வகுப்புகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பத்து நாள்கள் செயலமர்வு நடத்தப்படவிருக்கின்றது.

ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர்களின் ஆங்கிலத் திறனை விருத்தி செய்யும் நோக்குடன் யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் செயலமர்வுகள் நடத்தப்படும் என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (202-207)

## குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா 25.08.2007




இரத்ததானம்- உயிர்காப்பது, உன்னதமானது

- சடுதியான பெருமளவான குருதிப் பெருக்கினால் உயிர்பிரிவதை இரத்தம் ஏற்றித் தடுக்கலாம்.
- குருதி உறையா நோய், குருதிச்சோகை, டெங்குக் காய்ச்சல் போன்றவற்றுக்கு குருதியை பலகூறுகளாக பிரித்து ஏற்றி பலரின் வாழ்வை நீடிக்கலாம், வளமாக்கலாம்.
- வலிமை மிக்க புற்றுநோய் (கான்சர்) சிகிச்சைகளுக்கு, புற்றுநோயாளரின் உடல் தாக்குப்பிடிப்பதற்கு அடிக்கடி இரத்த கூறுகளை ஏற்றி வாழ்வை நீடிக்கலாம்.
- பிறந்த குழந்தைக்கு ஏற்படும் மஞ்சள்காமாலை நிலையின் பாதிப்பிலிருந்து பாதுகாக்க உடல் இரத்தத்தை முழுமையாக அகற்றி புதிய இரத்தம் ஏற்றப்படலாம்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.


## POST OF INTERNAL AUDITOR

Applications are invited for the above post. The right candidate should have:

* At least partially qualified from a recognised Accounting body.
* A minimum of 02 years experience in a recognised Audit Firm.
* Able to work in a computerised Accounting System.
* A self motivated player and willing to work long hours when called upon to do so.
* Retired Government Servants are also eligible to apply.
* A working knowledge of English would be an added qualification.
* If necessary, accommodation can be provided closer to the Office.

Applications should reach the address given below within 07 days of this advertisement.

**3001**
**c/o UTHAYAN**
**361, Kasthuriyar Road, Jaffna.**
(C/53415)


# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் கந்தையா

கரவெட்டி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் கந்தையா(தங்கராசா) 19.08.2007 ஞாயிற்றுக்கிழமை கரவெட்டியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரவியநாயகியின் அன்புக் கணவரும் வசந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), வசந்தினி (லண்டன்), ஜயந்தினி(ஆசிரியை, யா/ஞானாசாரியார் கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்புத்தந்தையும் பராசக்தி (B.A. ஆஸ்திரேலியா), குணலிங்கம் (லண்டன்) இரவீந்திரன் (கடற்றொழில் பரிசோதகர், பருத்தித்துறை கிழக்கு) ஆகியோரின் அன்பு மாமனும் ஜனனி, நயனி(ஆஸ்திரேலியா), சோபனா, சுதர்சனா(லண்டன்), கிரிதர், கிவாஸ்கர், அஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2007) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வசந்தகிரி, கரவெட்டி மத்தி, கரவெட்டி.* (63995)

தகவல்: இ.இரவீந்திரன் (மருமகன்)

## அன்னலக்சுமி பத்மநாதன்

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னலக்சுமி பத்மநாதன் நேற்று (21.08.2007) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிஐயா- அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும் ரதாயினி, பார்த்திபன் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற Dr. அருமைத்துரை, ராஜலக்சுமி, சின்னத்தம்பி, சிவபாலன், சந்திரபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் சிவானந்தவல்லி, வாலாம்பிகை, பேரின்பநாதன், தருமநாயகி காலஞ்சென்ற தேன்மொழி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2007) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோயிலடி, சித்தன்கேணி.* (63979)

தகவல்: க.பத்மநாதன் *(கணவர்)*.

## சுப்பிரமணியம் குணரத்தினம்

(கிளி/பிரதேசசபை ஓய்வு பெற்ற ஊழியர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சு.குணரட்ணம் 20.08.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்- மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வீரசிங்கம்-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் தனஞ்சயன் (கனடா), நளினி, வாதுனன், விமலா ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி, குணமணிதேவி, யோகமணி, மனோன்மணி (ஜேர்மனி), இராசகுலேந்திரன், பத்மாவதி, இரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காயத்திரி (கனடா), உமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2007) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*50, செட்டித்தெரு லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.* (63993)

தகவல்: குமரன், செந்தூரன் *(மருமக்கள்)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Examination For Grade Five Students for Selection to School and for the Award of Bursaries - 2007**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்பட்ட

# புலமைப் பரிசில் பரீட்சை -2007
## வினாத்தாள்- 11

பின்வரும் பந்தியை வாசிக்க.

"பூத்துணிபோல் தோன்றிய நட்சத்திரங்களை விட பூரணச் சந்திரனே வானில் தெரிந்தது. தொலைவில் உள்ள சந்திரனின் கதிர்கள் விழுந்து சமுத்திரம் பளபளத்தது. கரைக்கு அண்மையில் இருந்த கற்பாறையைத் தவிர்த்துக்கொண்டு கப்பல் செலுத்தப்பட்டமையால் அது சற்று வளைவான பாதையில் சென்றது."

இப்பந்தியைப் பயன்படுத்தி 1தொடக்கம் 6 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

01. மேற்குறித்த விவரணத்தில் நாளின் எந்தக்காலம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது?
........................................................................

02. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக.
........................................................................

03. "அண்மையில்" என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக.
........................................................................

04. "சமுத்திரம்"என்பதன் ஒத்தசொல்லை எழுதுக.
........................................................................

05. கப்பல் எதனைத் தவிர்த்துக்கொண்டு சென்றது?
........................................................................

06. "அது சென்றது." இங்கு அது என்பதனைப் பன்மையாக மாற்றி எழுதுக.
........................................................................

7ஆம், 8ஆம் வினாக்களில் உள்ள ஒவ்வொரு பழமொழியினதும் கருத்தை எழுதுக.

07. ஆழம் அறியாமல் காலை விடாதே.
........................................................................

08. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.
........................................................................

09. அடைப்பில் உள்ள எழுத்துக்களில் இருந்து பொருத்தமான எழுத்தைத் தெரிவு செய்து பின்வரும் சொற்களைப் பூரணப்படுத்துக.

( ள ண ல ழ )

1) நூ....கம். 2) மா.....வன். 3) வ...க்கு. 4) விமா....ம்.

10. பின்வரும் வாக்கியத்தைப் பெண்பாலாக மாற்றி எழுதுக.
நண்பன் பாட்டுப் பாடினான்.
........................................................................

11. பொருத்தமான நிறுத்தற் குறியை இடுக.

| உங்களுக்கு வெற்றி உண்டாகுக |
|---|

12. பின்வரும் வாக்கியத்தின் கருத்துக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.
ஒருவருக்கும் தீங்கு அல்லது இம்சை செய்யாமை. ......................

13. பின்வரும் சொற்களைப் பொருத்தமாக்கி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| வெளியிடுவதில் | பத்திரிகை | பிரதான | வகிக்கிறது |
| இடம் | செய்திகளை | | |

........................................................................

14. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

1) This is my .........................



2) "கிளி" என்பதன் ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
........................................................................

15. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
I am hungry. ....................... .. ..................

16. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
உமது பெயர் என்ன? ..........................................

17. இதன் கருத்தைத் தமிழில் எழுதுக.
மௌஹி என்ன. ..........................................

18. "பால் குடிக்க" என்பது சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
........................................................................

19 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

19. பின்வரும் பூக்களிடையே நறுமணம் வீசும் பூ,
1) காட்டு மல்லிகை. 2) நந்தியாவட்டை.
3) மல்லிகை. 4) வாடாமல்லிகை.

20. புளியமரத்தின் இலைகளின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள இலைகள் இருக்கும் தாவரம்,
1) அகத்தி. 2) வல்லாரை.
3) பொன்னாங்காணி. 4) தொட்டாச்சுருங்கி.

21. தண்டில் காய்க்கும் தாவரம்,
1) விளிம்பி. 2) லொவி.
3) எலுமிச்சை. 4) மங்குஸ்தான்.

22. பூக்களுக்குத் தீங்கு பயக்கும் விலங்கு,
1) ஈசல். 2) தேனீ. 3) குளவி. 4) வண்டு.

23. பின்வருவனவற்றில் புரதம் மிக்கது,
1) கரட். 2) பருப்பு. 3) கீரை. 4) பசளி.

24. மருத்துவரினால் நோயாளிக்கு விதிக்கப்படும் மருந்தைக் குடிக்கு முன்பாகக் கருத்திற் கொள்ளவேண்டிய முக்கிய விடயம்,
1) மருந்தில் அடங்குபவை. 2)மருந்தை உற்பத்திசெய்த நாடு.
3) ஒரு வேளைக்கு எடுக்கவேண்டிய அளவு. 4) மருந்தின் விலை.

25. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு,
1) வடக்கே. 2) தெற்கே. 3) மேற்கே. 4) கிழக்கே.

26. ஆடையில் படிந்த தார்க்கறையை நீக்குவதற்கு மிகவும் உகந்த பொருள்,
1) மண்ணெண்ணெய். 2) தேங்காயெண்ணெய்.
3) எலுமிச்சம் புளி. 4) வினாகிரி.

27. மஞ்சள் நிறப்பின்னணியில் காணப்படும் இவ்வீதிச் சமிக்ஞை எதனைக் குறிப்பிடுகின்றது?




1) முன்னால் நில்.
2) படலையுடன் கூடிய புகையிரதக் கடவை வீதிக்கு முன்னால்.
3) பாதுகாப்பில்லாத புகையிரதக்கடவை வீதிக்கு முன்னால்.
4) வீதி எதிரே மூடப்பட்டுள்ளது.

28. நாய் கடித்தால் முதலில் என்ன செய்ய வேண்டும்?
1) கடித்த இடத்தைத் துணியினால் கட்ட வேண்டும்.
2) கடித்த இடத்தைச் சவர்க்காரத்தினாலும் தூயநீரினாலும் கழுவிவிட வேண்டும்.
3) கடித்த இடத்தில் மருந்தைப்பூச வேண்டும்.
4) நோயாளியை மருத்துவரிடம் கொண்டுசெல்ல வேண்டும்.

29. துளைக் கமராவின் ஊடாகத் தொலைவில் உள்ள கட்டடம் தோற்றும் விதம்,




30. நேற்று இரவு வானில் பூரண சந்திரன் காணப்பட்டிருந்தால் ஒரு வாரத்திற்குப் பின்னர் வானில் காணப்படும் சந்திரனின் வடிவத்தைக் காட்டும் உரு?




31. இலங்கைப் பிரஜையின் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைப் பெறுவதற்கு முதலில் செல்லவேண்டியது.
1) பொலிஸ் நிலையத்திற்கு. 2) கிராம அலுவலரிடம்.
3) சமாதான நீதவானிடம். 4) பிரதேசச் செயலாளரிடம்.


32. இலங்கையில் ஒரு குறித்த பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அப்பிரதேசத்தில் இருந்து மக்களை விரைவாக வெளியேறுமாறு அறிவுறுத்துவதற்கு மிகவும் உகந்த ஊடகம்,
1) ஒலிபெருக்கி. 2) தொலைபேசி.
3) தொலைக்காட்சி. 4) வானொலி.

33. அயடின் சேர்க்கப்பட்ட உப்புப்பொதியில் பின்வரும் குறியீடு உள்ளது. இதன் கருத்து யாது?



1) ஈரலிப்பு உள்ள இடத்தில் வைக்க வேண்டாம்.
2) குழாய் நீரைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்க.
3) கழுவாமல் பயன்படுத்துக.
4) வெந்நீரால் மாத்திரம் கழுவுக.


34. தையல் முறைகளிடையே 'விஸ்பம்' தையலைக் காட்டும் உரு எது?




35. கண்டமாலை நோய்க்குப் பிரதான காரணம்,
1) அயடின் குறைபாடு. 2) இரும்புச்சத்து குறைபாடு.
3) விற்றமின் குறைபாடு. 4) கல்சியக் குறைபாடு.

36. சூரிய ஒளி நன்றாக விழும் இடத்தில் ஒரு மரத்தின் கிளை பரிசோதனை ஒன்றுக்காக பொலித்தீன் பையினால் மூடிக்கட்டி வைக்கப்பட்டது. ஏறத்தாழ ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் அதனை அவதானித்த போது,
1) அதன் இலைகள் வாடி இருக்கக் காணப்பட்டன.
2) இலைகள் ஓரளவு மஞ்சள் நிறமாகக் காணப்பட்டன.
3) பையினுள்ளே சிறிய நீர்த்துளிகள் படிந்திருக்கக் காணப்பட்டன.
4) பையின் உள்ளேயும் வெளியேயும் நீர்த்துளிகள் படிந்திருக்கக் காணப்பட்டன.

37. விழாக்காலங்களில் மேளவாத்தியத்துடன் பயன்படுத்தப்படும் வேறொரு பொருள்,




38. பொலித்தீன் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்றைத் தெரிவுசெய்க.
1) பொலித்தீனை எரிக்கும் போது வெளியேறும் நச்சுவாயு நோய்களை உண்டாக்குகின்றது.
2) பொலித்தீன் விரைவாக உக்குவதற்கு மண் உதவுகின்றது.
3) பொலித்தீன் துண்டுகள் வடிகால்களை அடைக்கின்றமையால் நீரோட்டத்திற்குத் தடை ஏற்படுகின்றது.
4) கைவிடப்பட்ட உணவு உள்ள பொலித்தீனை உண்பதால் விலங்குகள் இறக்கின்றன.

39. மகாவலி கங்கை கடலுடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நகரம்,
1) களனி. 2) களுத்துறை.
3) காலி. 4) திருகோணமலை.

40. சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படுவது,
1) வெள்ளை அன்னம். 2) வெண்புறா.
3) வெள்ளைக் கொக்கு. 4) நாகணவாய்.

பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் சில கருவிகள் கீழே காணப்படுகின்றன.




பின்வரும் பணிகள் ஒவ்வொன்றையும் செய்வதற்கு மிகவும் உகந்த கருவியின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

41. கைமரத்தினூடாகச் செல்லும் துளையைத் துளைப்பதற்கு,
........................................................................

42. மரக்குற்றியில் உருவத்தைச் செதுக்குவதற்கு,
........................................................................

இலங்கையின் இரு கலைப்படைப்புக்களின் படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.



43.................................



44. ................................

45. இலங்கையின் இரு பிரசித்தி பெற்ற விளையாட்டுக்களின் படங்கள் கீழே காணப்படுகின்றன. அவற்றின் பெயர்களை எழுதுக.



1) ..............................




2) ..............................

46. இரு உலர்மின்கலங்களும் ஒரு மின்குமிழும் உருவில் காணப்படுகின்றன. மூன்று வயர்த்துண்டுகளை மாத்திரம் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச்செய்வதற்கு உலர்மின்கலங்களையும் மின்குமிழையும் தொடுக்கவேண்டிய விதத்தை வரைக.



47. ஒரு குழுவில் உள்ள மாணவர்களிடம் இருந்து அவர்கள் மிகவும் விரும்பும் பழங்கள் பற்றிக் கேட்கப்பட்டு, அத்தகவல்கள் குறிக்கப்பட்டன.





1) மாம்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?
........................................................................

2) கொய்யாப்பழத்தை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் பப்பாசிப்பழத்தைக் கூடுதலாக விரும்புகின்றனர்?
........................................................................

3) 35 மாணவர்கள் அன்னாசிப்பழத்தை விரும்பினர். அதனை வரைபின் உரிய நிரலில் குறித்து நிழற்றுக.


4) இந்த 5 வகைப் பழங்களையும் விரும்பும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது? ..........................................

48. ஒரு கட்டடத்தின் திட்டப்படம் பின்வரும் உருவில் காணப்படுகின்றது.




இங்கு காட்டப்பட்டுள்ள அளவிடைக்கு ஏற்ப அறை 3 இன் நீளம் யாது?
........................................................................

49. உருவில் காணப்படும் சதுரத்தின் இரு சமச்சீர்க் கோடுகளை வரைக.



50. சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் பின்வரும் உருவிலே கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

| | | | புத்தளம் |
|---|---|---|---|
| | | கொழும்பு | 142 |
| | காலி | 116 | 258 |
| மாத்தறை | 45 | 161 | |

மாத்தறையில் இருந்து காலி, கொழும்பு ஊடாகப் புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது? ..........................................

51. ரு.25.00 விலையுள்ள ஒரு வரைதற் புத்தகத்தையும் ரு.15.50 விலையுள்ள ஒரு வர்ணப் பெட்டியையும் வாங்கி நூறு ருபாய்த் தாள் ஒன்றினைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதி யாது? ரு...........சதம்..........

52. ரவியின் தாயின் நிறை ரவியின் நிறையின் இருமடங்காகும். தாயின் நிறை 55kg500g எனின் ரவியின் நிறை யாது? ............kg............g

53. ஒவ்வொன்றும் 700ml கொள்ளளவுள்ள ஆறு போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் இடப்பட்டது. பாத்திரத்திலுள்ள பானத்தின் மொத்தக் கனவளவு லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் யாது? ..........l..........ml

54. கடிகாரம் Aஇன் முகத்தில் காணப்படும் நேரத்தைக் கடிகாரம் Bஇன் முகத்தில் காட்டுவதற்கு அதில் மணித்தியால முள்ளையும் நிமிட முள்ளையும் வரைக.





55. ஓர் அறையின் சுவர்களில் பூசுவதற்கு 3லீற்றர் தீந்தை தேவை. தீந்தையை அரை லீற்றர் தகரப்பேணிகளில் கொள்வனவு செய்யலாம். ஒரு தகரப்பேணி தீந்தையின் விலை ரு.350.00 ஆகும். தீந்தைக்காக எவ்வளவு பணம் செலவிடப்பட்டது?
ருபாய் ..............

56.  உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக. ........................,

57. ஒருவருக்கு 6 பென்சில்கள் வீதம் 650 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்? ........................

58. தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கேற்ப இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.




59. மாணவன் ஒருவன் எழுத ஆரம்பித்த ஒரு கட்டுரையின் முதல் பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அவன் நிறுத்திய இடத்தில் இருந்து 6 ஆக்கபூர்வமான வாக்கியங்களை எழுதி மீதிப்பகுதியைப் பூரணப்படுத்துக.

"சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புக்கள் கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளங்குட்டைகள், கிணறுகள், தடாகங்கள் ஆகியன வரண்டுபோய் இருந்தன. கண்ணிற்குத் தெரியும் அளவிற்குப் பச்சைநிறம் காணப்படவில்லை.

அதிஷ்டவசமாக/திடீரென இடி மின்னலுடன் வானம் மழைபெய்யத் தொடங்கியது............

(ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.)

1) ........................................................................
........................................................................
2) ........................................................................
........................................................................
3) ........................................................................
........................................................................
4) ........................................................................
........................................................................
5) ........................................................................
........................................................................
6) ........................................................................
........................................................................

முற்றும்

விடைகள் 02 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு

வலி.வடக்கு,ஓக.22

வரலாற்றுப் புகழ்மிக்க மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் மீது பாடப்பட்ட பாடல்கள் கொண்ட நூல் வெளியிடப் பட்டுள்ளது.

மாவை கொல்லங்கலட்டியைச் சேர்ந்த சு.குகதேவன் தொகுத்த இந்நூலை மாவை ஆதீனம் வெளியிட்டுள்ளது.

(202-68)

# படுவான்கரைக்குச் சென்றுவர 'பாஸ்' முறைமை நடைமுறையில்!

## ஆட்சேபிக்கின்றார் அரியநேந்திரன் எம். பி.

கொழும்பு, ஓக. 22

புலிகளிடமிருந்து அரச படையினரால் மீட்கப்பட்ட மட்டக் களப்பு படுவான்கரைப் பகுதிக்கு ஏனைய பகுதிகளிலிருந்து சென்று வருவதற்கு படையினர் 'பாஸ்' முறைமை ஒன்றை நடைமுறைப் படுத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படுவான்கரைப் பிரதேசத்திற்குப் புதிதாகச் செல்லும் வெளியார் அங்கு இரவில் தங்குவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர் என்றும், அங்கு செல்பவர்கள் இரவாகு முன்பு அங்கிருந்து திரும்பி விடவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் என்றும் தெரியவருகின்றது.

படுவான்கரைக்குச் செல்பவர்களுக்கு மண்முனைத்துறை, அம்பிலாந்துறை, வவுணதீவு, பட்டிருப்பு மற்றும் செங்கலடிப்பாலம் ஆகிய இடங்களில் உள்ள முன்னரங்கக் காவல் நிலையங்களில் படையினர் 'பாஸ்'களை வழங்கி வருகின்றனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்றவர்கள் அங்கிருந்து திரும்பி வருகின்றபோது அந்த பாஸ்களை முன்பு தாம் பெற்ற முன்னரங்கக் நிலைகளில் ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்றும் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று வருபவர்களுக்கு விதிக்கப்படுவது போன்ற கெடுபிடி படுவான் கரைக்குச் செல்வோருக்கும் விதிக்கப்படுவதால் படுவான்கரையில் இன்னும் புலிகளின் நிர்வாகம் உள்ளதா என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (சி)


மலிவான விலையில் புதிய கணனி மற்றும் கணனி உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

15''View Sonic Monitor - 15,100/=
80GB Sata Hard Disk - 6,750/=

Sky Computer System
89A, Kandy Road, Chundukuli, Jaffna.
T.P:- 021 222 9109

(சி/53406)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பூவுலகு 30 - 09 - 1934



விண்ணுலகு 23 - 07 - 2007

## அமரர் சின்னப்பு தெய்வானை

தாய்மைக்கு முதற்படியாய் பெருமைசேர் இளையோர்க்கு
அன்பின் உறைவிடமாய் பண்பின் பிறப்பிடமாய்
நேர்மையின் சிறப்பிடமாய் குடும்பத்தில் ஒளி விளக்காய்
துன்பத்தை தான் சுமந்து இன்பத்தை எமக்களித்த
அம்மாவே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்
சின்னப்பு சண்முகசுந்தரம் (மகன்).

எருவன்,
கொடிகாமம். (63926)

# கோழிக்குஞ்சு விற்பனை

இம் மாத இறுதியில் புறொயிலர் குஞ்சு பெற்றுக்கொள்ளலாம். முற்பதிவு செய்யவும்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.
(63891)

# தவறிவிட்டது

க.இராசதுரை என்பவருடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதி அனுமதிப்பத்திரமும், வரிப் பத்திரமும் இராணுவப் பதிவு அட்டையும் நாவலர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் குகன் கொப் பீஸ்ற்,இல.214 C, இராமநாதன் வீதி எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(63973)


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
ROYAL Industries Colombo 12
அனைத்துப் பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். →




ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்ரீ சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை அறிவித்தல்

வழ.இல.1218/T
*மரணசாதன நியாயாதிக்கம்*

மரணசாதனமேதும் எழுதாது காலஞ்சென்ற புலோலி மேற்கு ஆழ்வாப்பிள்ளை கணபதிப் பிள்ளை பெண் சிவபாக்கியத்தின் சொத்து விடயமாக.

- இறந்தவர்

ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை
-புலோலி மேற்கு
- மனுதார்

எதிர்

01. கணபதிப்பிள்ளை மாணிக்கம் -புலோலி மேற்கு
02. கணபதிப்பிள்ளை இராசரத்தினம் -புலோலி மேற்கு

-எதிர்மனுதார்கள்.

கணபதிப்பிள்ளை மாணிக்கம்- புலோலி மேற்கு
தற்காலம்: 36, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை.

எதிர்

01. இராமநாதன் ரவிசங்கர்- தற்காலம் ஓமான்
02. பெண் மஞ்சுளாதேவி- 54/10, கடல்முக வீதி, திருகோணமலை (முதலாம் பிரதிவாதி தனது தத்துவகாரி 2ஆம் பிரதிவாதி மூலம் தோற்றம்)
03. இராசரத்தினம் குணசீலன்- தற்காலம் டென்மார்க்
04. இராசரத்தினம் பிரேமசீலன்- தற்காலம் ஜேர்மனி இருவரும் தமது தத்துவகாரி இராசரத்தினம் கைம்பெண் இராஜேஸ்வரி 54/10, கடல்முகவீதி, திருகோணமலை மூலம் தோற்றம்.

-எதிர் மனுதார்கள்

இவ்வழக்கின் மூல முதலாம் எதிர்மனுதாரரும் தற்போதைய மனுதாருமான கணபதிப்பிள்ளை மாணிக்கம் தம்மை இவ்வழக்கின் மூல மனுதாரான இறந்த ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை இடத்துக்கும் இறந்த மூல 2 ஆம் எதிர்மனுதார் கணபதிப்பிள்ளை இராசரத்தினத்தின் இடத்துக்கு தற்போதைய 1 ஆம், 2ஆம், 3ஆம் எதிர்மனுதார்களையும் பதிலீடு செய்து இவ்வழக்கைத் தொடர்ந்து நடத்தி முடிவுக்குக் கொண்டு வர அனுமதி தருமாறு இம்மன்றுக்கு மனுச் செய்துள்ளார். அத்தகைய அவரின் விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின் அக்கறையுள்ள ஆள் எவரும் 2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக இம்மன்றில் தோற்றி தமது ஆட்சேபனைகளைக் கோப்பிடுமாறும் அவ்வண்ண ஆட்சேபனை ஏதும் இல்லாதவிடத்து தற்போதைய மனுதாரின் விண்ணப்பம் அனுமதிக்கப்பட்டும் வழக்கு தொடர்ந்து நடத்தப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்படுமெனவும் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகிறது.

*2007 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி*
*மன்றின் கட்டளைப்படி*

*செ.விக்கினேஸ்வரமூர்த்தி J.P.,*
*பதிவாளர்/ பிரதி பிஸ்கால்.*
*பதிவாளர், மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.*

*வரைவு*
*மனுதார் சட்டத்தரணி.*
*(63965)*

# 31ஆம் நாள் நினைவலைகளில்

ஆண்டவன் படைப்பு 05 - 07 - 1981



அநியாய அழிப்பு 23 - 07 - 2007

## அமரர் மரியநாயகம் அலோசியஸ் (ராஜ்)

(B.A.Hons. English literature, Protection Field Officer - DRC Jaffna)

எம் செல்வமே!
காலையிலே உணவூட்டி பக்குவமாய் அனுப்பி வைத்தோம்
சாலையிலே காலன் உன்னை காத்திருந்ததார் அறிவார்
மாலையிலே வருவாய் நீ என்றேங்கி இருந்தவேளை
மரப் பெட்டி தனில் நீயும் உயிரற்று வந்தாயோ!

கண்ணுக்குள் கண்ணாக உனை வைத்து காத்திருந்தோம்
கண்ணா! கண் உறங்க முடியாமல் கதறித் துடிக்கின்றோம்
காரணம் ஏதுமின்றி கயவர் உனைப் பறித்தனரே
கவர்ந்தவனும் இனி உன்னை எம்மிடத்தில் தருவானோ!

ஐயா! உன் இழப்பை நாம் எப்படித்தான் தாங்குவது
மெய்யோ இவ் உலகில் நீதி எங்கு நடக்குதய்யா?
கையறுந்த நிலைதன்னில் துன்புற்று வாடுகின்றோம்
வையத்தில் உன் வதனம் இனி எப்போ நாம் காண்போம்.

எமது துயரத்தில் பங்குகொண்டு எமக்கு உற்ற துணையாக நின்று ஆறுதல்களையும் அனுதாபங்களையும் அளித்து பல வழிகளிலும் உதவிகள் செய்த DRC நிறுவனத்தினர், அருட்தந்தைமார்கள், அருட்சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், இளவாலை புனித வளனார் விடுதி மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆன்ம சாந்திக்காக இன்று (22-07-2007) புதன்கிழமை காலை 7 மணிக்கு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*சில்லாலை தெற்கு,*
*பண்டத்தரிப்பு.*

(63884)

குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

# வீடு வாடகைக்கு

நல்லூர் சுற்றாடலில் 3 அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 4591184
(63974)

# விண்ணக வாழ்வின் 5ஆம் ஆண்டு

## அழியாக் கண்ணீர் நினைவலைகள்

''தங்க நிகர் தலை மகளே
பொங்கு புகழ் வித்தகியே
எங்கள் குல விளக்காய் வாழ்ந்த உன்னை
இழந்து விட்ட சோகம் இன்றும்
எம் இதயத்தில்
கண்ணீராய் வடிகிறதே
வாழ்வதற்கு காலங்கள் காத்திருக்க
கடமை முடிந்ததென்று பாதி வழியில்
சென்று விட்டீர்
ஆண்டுகள் ஐந்து சென்றாலும்
ஏங்கித் தவிக்குதம்மா
தாயின் நெஞ்சம்
எங்கள் உதிரத்தின் உறவே
ஏன் பிரிந்தாய் எம்மை?
புவி உள்ள நாள் மட்டும் உன் நினைவு
தவிக்கின்ற எம் நெஞ்சில் வாழும் அம்மா
பரமன் பாதத்தில் என்றும் மலராய்
மலர்ந்திட
மனமாரப் பணிகின்றோம் அவர் பூதம்
உளமார வேண்டுகிறோம்
எப்போதும்''



## செல்வி நிரஞ்சனி சிவஞானம்

(இலிகிதர், யா/கல்வித் திணைக்களம்)

இறைவனடியில் : 22-08-2002

(63963)

திருமதி S.சிவஞானம் - கனடா.

அம்மாவும் அன்புச் சகோதரங்களும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அவசியமாகத் தேவைப்படும் சமயத்தில் தடுக்கப்படும் மனிதாபிமானப் பணி

யுத்தம் காரணமாகவும், ஆழிப்பேரலை அனர்த்தம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் காரணமாகவும் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆற்றப்பட வேண்டிய அவசர - அவசிய - மனிதாபிமானப் பணிகள் மிக நெருக்கடிக்குள்ளும், இக்கட்டுக்குள்ளும் சிக்கியுள்ளன.

இலங்கையில் இத்தகைய மக்களுக்கான மனித நேயத் தொண்டுப் பணியில் ஈடுபட்டிருந்த சுமார் 34 ஊழியர்கள் கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படும் பின்னணியில் -

*''மனித நேயத் தொண்டுப் பணியாளர்கள் தமது கடமையை ஆற்றுவதற்கு உலகில் மிக மோசமான இடமாக இலங்கை உள்ளது.''* - என்று ஐ. நாவின் அவசரகால நிவாரணப் பணி ஒருங்கிணைப்புப் பிரிவின் உயர் அதிகாரி ஜோன் ஹோம்ஸ் திறந்த மனதோடு கூறிய கருத்து இலங்கை அரசை - தென்னிலங்கையை - பெரும் சீற்றத்துக்குள் ஆழ்த்த வைத்தது.

ஐ. நா. உயரதிகாரியைப் பார்த்து அவர் புலிகளிடம் பணம் (லஞ்சம்) வாங்கிய பயங்கரவாதி என்றும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்க்கும் சர்வதேச சதியின் ஓர் அங்கமே அவரது கூற்று என்றும் இலங்கை அரசின் மூத்த அமைச்சர்கள் பகிரங்கமாக - காட்டமாக - குற்றம் சுமத்தும் அளவுக்கு நிலைமை மோசமடைந்துள்ளது.

ஆனால் அது ஒருபுறமிருக்க, மனிதாபிமானத் தொண்டுப் பணியாளர்களின் நிலை இலங்கையில் மிக மோசமான கட்டததை அடைந்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் - நிரூபிக்கும் - மற்றும் ஒரு சம்பவம் நேற்று முன்தினம் அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடியகற்றும் டென்மார்க் நாட்டு நிறுவனத்தின் உள்ளூர்ப் பணியாளர்கள் இருவர், நகரின் மத்தியில் வைத்து, மோட்டார் சைக்கிளில் கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டிருக்கின்றனர். இதில் பணியாளர் ஒருவர் உயிரிழந்து விட்டார். மற்றொருவர் மிக ஆபத்தான கட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார். ஏனைய படுகொலைச் சம்பவங்கள் போன்று, இந்தப் படுகொலை தொடர்பாகவும் யாரும் கைதுசெய்யப்படவோ, சட்டத்தின் முன்நிறுத்தப்படவோ, தண்டிக்கப்படவோ போவதில்லை என்பதும் எதிர்பார்க்கப்படும் ஒன்றுதான்.

ஆக, இவ்வளவு காலத்தில், கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களான - தொண்டு ஊழியர்களான - இருவர் விடயத்தில் மட்டும், கொலைச் சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார், ஆனால் அவர் தப்பிவிட்டார் என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டிருக்கின்றது. இந்தப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக மட்டும் ஒட்டுக் குழு உறுப்பினர் ஒருவரின் பின்னணி கோடி காட்டப்பட்டதோடு சரி. அதுவும் கூட இந்தப் படுகொலை தொடர்பாக எழுந்த கடும் சர்வதேச அழுத்தத்தின் பின்னரே, சூத்திரதாரி பற்றிய தகவல் விக்கி, விழுங்கி, வெளியிடப்பட்டிருக்கின்றது.

இப்போது - நேற்றுமுன்தினம் - டெனிஷ் தொண்டு நிறுவனப் பணியாளர் படுகொலை செய்யப்பட்ட பின்னணியில் அங்கு தமது பணிகளை இடைநிறுத்தப்போவதாக டெனிஷ் அகதிகள் கவுன்ஸிலும், டெனிஷ் கண்ணி மீட்பு நிறுவனமும் தெரிவித்திருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

இதேசமயம், கிழக்கில் அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த அகதிகள் படும் அவலத்தை, முன்னாள் இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ரால் தலைமையிலான - மனித உரிமைகளுக்கான தெற்காசியர்கள் அமைப்பு என்ற - ஸ்தாபனம் வெளிவெளியாக அம்பலப்படுத்தியிருக்கின்றது.

''பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில் பழைய இடங்களுக்கு திரும்பிச்செல்லுமாறு அவர்களது விருப்பத்துக்கு மாறாக அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள்'' - என்று அந்த அமைப்பு சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அரசுப் படைகளும், அதனுடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுவும் இந்த அகதிகளைத் தமது கைப்பொம்மைகளாகப் பயன்படுத்துகின்றன என்றும் அந்த அமைப்பு குற்றம் சுமத்தியிருக்கின்றது.

யுத்தத்தால் சிதைவுற்றுள்ள வடக்கு, கிழக்கு மற்றும் இவற்றின் எல்லைப் பிராந்தியங்களுக்கும், கிழக்கில் அகதிகள் நிரம்பி வழியும் அகதி முகாம்களுக்கும், இந்த அகதிகள் மீளத் திரும்பிச்செல்லுமாறு நிர்ப்பந்திக்கப்படும் பகுதி களுக்கும் இந்த அமைப்பின் ஆய்வாளர்கள் நேரில் சென்று கண்டறிந்தவற்றின் அடிப்படையிலேயே மேற்படி தகவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது.

அகதி முகாம்களில் வாழ்க்கைத் தரம் மோசமடைந்துள்ளது. சுகாதாரச் சீரழிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன. சில முகாம்களில் ஒழுங்கான உணவு விநியோகம் இன்மையால் சுகாதாரச் சீர்கேடுகளுக்கும் வழி செய்யப்பட்டுள்ளது. போஷாக்கின்மையால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். போதிய குடிதண்ணீர் வசதி கிடையாது. கல்வி வசதி இல்லை. சகிக்க முடியாத சீர்கேடுகள் நீடிக்கின்றன. - இப்படி அந்த அமைப்பு உண்மை நிலையைப் புட்டுக்காட்டியுள்ளது.

இவ்வாறு அகதிகளின் நிலைமை மோசமடைந்து, மனிதநேயத் தொண்டுப் பணிகளும் உதவிகளும் அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படும் இச் சமயத்தில் தொண்டுப் பணியாளர்கள் அவற்றைச் செய்யமுடியாதவாறு நெருக்குதல் - இக்கட்டு - தீவிரமடைந்து வருவது, ஏதுமற்ற ஏதிலிகளை இன்னும் மோசமாகப் பாதிக்கப்போகின்றது.

மனித நேயப் பணியாளர்களை சாகடித்துக் காவுகொள்ளும் இந்தக் கொடூரத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பது எப்போது? அப்போதுதான், அந்த மனிதாபிமானத் தேவைகளை எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவலத்திலிருந்து அந்த அகதிகள் மீளுவதற்கு சற்றேனும் வாய்ப்புக்கிட்டும்.

# வாழைச்சேனை தமிழ்ப் பிரதேசத்தில் அத்துமீறிய குடியேற்றத்துக்குத் தடை!

## சூத்திரதாரியான ஜிகாத் உறுப்பினரைக் கைது செய்யவும் பிடியாணை

கொழும்பு, ஓக.22

வாழைச்சேனை கோரளைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களான கொண்டையன் கேணி, களுவாங்கேணி, மீராவோடை ஆகிய தமிழ்ப் பகுதிகளில் அரச காணிகளில் அத்துமீறிக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிராக வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றது.

இந்தப் பிரதேசத்தில் குடியேற்றங்களை மேற்கொள்வதன் பின்னணியில் சூத்திரதாரியாக நின்று செயற்படுபவர் எனக் கூறப்பட்ட 'ஜிகாத்' அமைப்பு உறுப்பினர் ஒருவரைக் கைது செய்யவும் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

வாழைச்சேனை நீதிவான் மாணிக்கவாசகர் கணேஷராஜா இது தொடர்பான உத்தரவுகளை விடுத்தார்.

மேற்படி பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் சுமார் நூறு குடும்பங்கள் வரை அரச காணிகளில் அத்துமீறிக் குடியேறியிருப்பது பற்றிய தகவல் பிரதேச செயலாளரின் சார்பில் அவரது அதிகாரி ஒருவரினால் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது எனக் கூறப்படுகிறது.

பிரதேச செயலகத்தின் முன் அனுமதியின்றி இவ்வாறு அரச காணிகளில் குடியேற்றம் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான உத்தரவை விடுக்குமாறும், ஏற்கனவே அத்துமீறிக் குடியேறியோர் குறித்து நடவடிக்கை எடுக்கும்படியும் நீதிமன்றிற்கு விண்ணப்பிக்கப்பட்டது.

இவ்விவகாரம் தொடர்பாகப் பொலிஸாரினாலும் நீதிமன்றுக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலும் -

நீதிமன்றில் ஆஜரான ஈஸாப் லெப்பை சலீம், தெளபீக் மெளலவி ஆகியோர் தெரிவித்த தகவலிலும் -

அப்துல் ஹமீட் ஜாவத் என்ற நபரே மேற்படி மக்களை அங்கு அத்துமீறிக் குடியேறத் தூண்டி வருபவர் என்பதும், அந்நபர் 'ஜிகாத்' அமைப்பைச் சேர்ந்தவர் என்பதும் தெரிவிக்கப்பட்டன. இவருடன் சிலர் சேர்ந்து இந்த அத்துமீறல் குடியேற்ற முயற்சியை முன்னெடுக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இதனையடுத்து, அந்த நபரைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான பிடியாணையை நீதிவான் விடுத்தார்.

மேற்படி பிரதேசத்தில் உள்ள அரச காணிகளில் உரிய - சட்டரீதியான - அனுமதியின்றி குடியேற்றங்கள் இடம்பெற அனுமதிக்கக்கூடாது எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

அந்தப் பிரதேசத்தில் ஏற்கனவே அத்துமீறிக் குடியேறியோர் எனக் கருதப்படுவோருக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் நீதிவான் பணித்தார்.

இவை தொடர்பாக பிரதேச செயலாளரும், கிராமசேவையாளர்களும் விடயங்களைக் கையாளும்போது அதில் யாரேனும் தலையிட்டுக் குழப்பம் விளைவித்தால் அது குறித்து உடன் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்வதோடு அதுபற்றிய விடயம் நீதிமன்றின் கவனத்துக்கும் உடன் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார். (சி)

## நேற்றும் இரு இளைஞர்கள் சரண் அடைந்தனர்

யாழ்ப்பாணம்,ஓக22

உயிர்அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்த இருவரை யாழ். பொலிஸார் யாழ்.நீதி மன்றத்தில் நேற்று ஆஜர் செய்தனர்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயது நிரம்பிய இந்த இளைஞர்களை நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

அதேவேளை- ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்ட இளைஞன் நேற்று நீதிவான் ஆ.கி.அலெக்ஸ்ராஜா முன் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரை நீதிமன்றப் பாதுகாப்பில் யாழ்.சிறைச்சாலையில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## டிப்ளோமாதாரிகள் ஒன்பது பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஓக.22

யாழ்.தேசியக்கல்வியியற் கல்லூரி டிப்ளோமா தாரிகளில் மேலும் 9பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட விருக்கின்றது.

இந்த நியமனம் தொடர்பான அறிவுறுத்தலைப் பெறும் பொருட்டு கீழ்க் கண்டவர்களை இன்று காலையில் கல்லூரிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

எஸ்.சுமிதா (இணுவில்), பி.சுஜந்தினி (வல்வெட்டித்துறை), எஸ். ஆரணி (வட்டுக்கோட்டை), டி.கமலராஜினி (முள்ளியவளை), ஜேம்ஸ் அன்ரனி(பேசாலை), எம்.சுதர்சினி (தெல்லிப்பழை), எஸ்.அருள்மேரி (எழுதுமட்டுவாள்), வி.தர்மி(மானிப்பாய்), எம்.விஜிதா(கிளிநொச்சி). (203)

## நீதிமன்ற உத்தரவின் பின்னரே மட்டு. எம்.பியின் சகோதரர் கொலை

கொழும்பு, ஓக.22

வாழைச்சேனை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள அரச காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்கள் இடம்பெறக் கூடாது என வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டபின்னரே - மாலையில் - ஓட்டமாவடிப் பகுதியில்வைத்து முதுகுப்புறமாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஜெயானந்தமூர்த்தி எம்.பியின் மூத்த சகோதரர் சேனாதிராஜா தியாகச்சந்திரன் கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

இவரது முதுகுப்புறமாக உள்நுழைந்த இரு துப்பாக்கி ரவைகள் வயிற்றைத் துளைத்துக்கொண்டு வெளியேறியிருக்கின்றன.

வாழைச்சேனைத் தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள அரச காணிகளில் அத்துமீறிய குடியேற்றங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி கடுமையாக எதிர்த்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தக் குடியேற்றங்களுக்கு எதிராக வாழைச்சேனை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடை உத்தரவு விடுத்த பின்னர் இருளும் சமயத்தில் ஓட்டமாவடியில் வைத்து ஜெயானந்தமூர்த்தியின் மூத்த சகோதரர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றார்.

இவர் சுடப்பட்ட இடத்திலிருந்து ஒரு பக்கத்தில் சற்றுத் தொலைவில் - நகர்ப் பிரதேசமும், மற்றைய இரு பக்கங்களிலும் சுமார் நூற்றிஐம்பது மீற்றர் தொலைவில் சோதனைச் சாவடிகளும் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

உயிரிழந்த தியாகச்சந்திரனின் சடலத்தை வாழைச்சேனை நீதிவான் மாணிக்கவாசகர் கணேஷராஜா வைத்தியசாலைக்குச் சென்று நேரில் பார்வையிட்டார். (சி)

## வவுனியா சுமதிபுரத் தாக்குதலை அடுத்து

# வீரபுரம் தமிழ்க் கிராமத்தில் குண்டர்கள் அட்டகாசம்!

கொழும்பு,ஓக.22

நேற்றுமுன்தினம் வவுனியா உலுக்குளம் பகுதியில் ஊர்காவலர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐந்து ஊர்காவலர்கள் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து குண்டர்களால் தமிழர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இரு தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

வன்னி மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தன் ஊடக அறிக்கை ஒன்றில் இது குறித்துத் தெரிவித்திருக்கின்றார்.

இந்த அறிக்கையில் அவர் தெரிவித்திருக்கின்றவை வருமாறு :-

20ஆம் திகதி செட்டிக்குளம் பிரதேசத்திலுள்ள சுமதிபுர பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 05 ஊர்காவலரும் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து, ஊர்காவற்படையினரும் எல்.பி கொலனி, அளுத்கம, சுமதிபுர ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சிங்கள மக்களும் சம்பவம் நடந்த இடத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவிலுள்ள வீரபுரம் என்ற தமிழ் கிராமத்திற்குள் புகுந்து பொதுமக்களைத் தாக்கியதுடன், இம்மக்களின் பெறுமதியான சொத்துக்களையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

மேற்படி கிராமத்திலுள்ள பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் கூட கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அங்கு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக, வீரபுரம் கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவர் ஆறுமுகம் நாகலிங்கம் (வயது - 55) என்பவர் அவரது வீட்டில் வைத்துக் கொல்லப்பட்டுள்ளார்.

மேலும்,அவ்வேளையில் சேவையில் ஈடுபட்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதியாகிய செந்தில்நாதன் (வயது - 35) ஊர்காவலரால் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து பஸ்ஸில் இருந்து பலவந்தமாக இறக்கப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் பாரபட்சமற்ற நீதி விசாரணை நடத்துமாறு கோரியுள்ளேன்.

மேற்படி வீரபுரம் உட்பட செட்டிக்குளம் பகுதி மக்கள் இதற்கு முன்னரும் பல தடவைகள் பாதுகாப்புப் படையினரால் துன்புறுத்தலுக்குள்ளானமையால், அங்கிருந்து அகதிகளாக இந்தியாவிற்கும் வேறு இடங்களுக்கும் நாளாந்தம் வெளியேறிச் சென்ற வண்ணமுள்ளனர். தற்போது மீதமாகவுள்ள மக்களையும் அச்சுறுத்தும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. ஜீவனோபயத்திற்காக அன்றாடம் கூலி வேலைக்குச் செல்லும் மிகவும் வறிய மக்களே இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

ஏற்கனவே,வாழ்வதற்காகப் போராடும் மேற்படி அப்பாவிப் பொதுமக்கள் மீது அரச படைகளும் சிங்களக் குண்டர்களும் அடிக்கடி தாக்குதல நடத்துகின்றமை மிகவும் கண்டிக்கத்தக்கது. மக்களைப் பாதுகாக்கவேண்டிய அரச படை களே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன.

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் அடிக்கடி நடக்கும் மோதல்கள் காரணமாக, ஆத்திர முற்று, பழிதீர்க்க முற்படும் அரச படையினர் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களை இலக்கு வைப்பது இனிமேலும் தொடராமல் இருப்பதை, உறுதிப்படுத்துவது இலங்கை அரசின் கடமையாகும். இதனைத் தடுக்க வேண்டியது அரசின் கடமையல்ல என்று உதறித் தள்ளிவிட முடியாது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### நாளை

| | |
|---|---|
| ஆவணி - 06 | வியாழக்கிழமை 23.08.2007 |
| திதி : தசமி | முன்னிரவு 07.03 |
| நட்சத்திரம் : | கேட்டை (முற்பகல் 08.30) |
| சுபநேரம் | : 07.35 - 09.05 |
| ராகுகாலம் | : 01.35 - 03.05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றையாட்சி முறைத்தீர்வை தமிழர் ஏற்கவே மாட்டார்கள்!

## நாடாளுமன்றில் அடித்துக் கூறுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

கொழும்பு, ஓக.22

ஒற்றையாட்சி முறையின் கீழ் முன்வைக்கப்படும் எந்த ஒரு தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள். இந்த அரசிடம் தமிழ் மக்களுக்கு அவர்களின் அடிப்படை உரிமைகளை வழங்குகின்ற அல்லது நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துகின்ற திட்டங்களும் இல்லை, அக்கறையும் இல்லை.

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம் சுமத்தினார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக சர்வ கட்சி மாநாட்டில் சர்வகட்சிப்பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பாக சபையில் நேற்று ஏற்பட்ட சர்ச்சையின்போதே சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் கூற்றை முற்றாகவே தாங்கள் நிராகரிக்கின்றார்கள் எனவும், அதனை ஏற்கப் போவதில்லை என்றும் ஜே.வி.பி. உறுப்பினர் விமல் வீரவன்ஸ இங்கு கூறினார். திஸ்ஸ விதாரண நாட்டைப் பிரிக்கும் புலிகளுக்கு ஆதரவான கருத்தை முன்வைத்துள்ளார் என்றும் விமல் குற்றம் சாட்டினார்.

இவ்வேளையில் ஆளும் கட்சியின் சார்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எந்த ஒரு தீர்வுத்திட்டம் முன்வைக்கப்பட்டாலும் அது ஒற்றை ஆட்சி முறையின் கீழ்தான் அமையும், இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்று கூறினார்.

இதன் பின்னரே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அரசாங்கத்தைக் கடுமையாகச் சாடினார்.

இந்த அரசிற்கு பிரச்சினைகளைத் தீர்க்கும் எண்ணம் கிடையாது. இனப்பிரச்சினைக்கு நிரந்தர மான தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக் கும் யோக்கியதை யும் இந்த அரசுக்கு இல்லை.



இவர்களுடைய போக்கும் பேச்சும் நாட் டில் மீண்டும் ஒரு பாரிய யுத்தத்தையே வெடிக்கச் செய்யும்.

இவர்கள் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் ஒற்றையாட்சி முறையினால் எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. அதனை தமிழ் மக்கள் ஏற்கவும் தயாராக இல்லை.

சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வையே நாம் எதிர்பார்க்கின்றோம். - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன். (சி)

## நல்லைத் திருவிழாவையொட்டி பிரதேசசெயலர் பிரிவில் ஊரடங்கு அரைமணிநேரம் தளர்வு

யாழ்ப்பாணம்,ஓக.22

நல்லூர் கந்தசாமி ஆலயப் பெருந் திருவிழாவையொட்டி நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் இரவு ஊரடங்கு அரைமணி நேரம் தளர்த்தப்பட்டுள்ளது எனப் பலாலிப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நல்லூர் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இரவு 7.30 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரையும் -

ஏனைய பிரதேசங்களில் வழமை போல இரவு 7 மணிமுதல் அதிகாலை 4.30 மணி வரையும் ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்என பலாலிப் படைத்தலைமையகம் மேலும் தெரி வித்துள்ளது.

(அ-1-5)

## டெனிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமது பணியாளர்கள் தொடர்ச்சியாக படுகொலை செய்யப்படுவதால், அவர்களின் பாதுகாப்பைக் கருதி இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிறுவனத்தின் ஊழியரான மரிய நாயகம் அலோசியஸ் கடந்த மாதம் 23 ஆம் திகதி ஆனைக்கோட்டையில் வைத்தும் மற்றொரு ஊழியரான சிவசாமி சிறீதரன் நேற்றுமுன்தினம் யாழ்.கஸ்தூரியார் வீதியில் வைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டதும் தெரிந்தவையே. (அ-1-5)

## நேற்றுக் கூடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பின்போது அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தொடர்பான விமர்சனங்களே முக்கியத்துவம் வகித்தன என அறிய வந்தது. குறிப்பாக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதி கம்பன்பிலே தலைவரின் ஊடகச் செயற்பாடுகள் குறித்துக் கடுமையாக விமர்சித்தார் எனவும் கூறப்படுகிறது.

90 வீத பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன எனவும், அடுத்தவாரம் தீர்வு யோசனைகள் குறித்த தீர்மானத்தின் மீதான கட்சிகளின் ஆலோசனைகள் பெறப்படும் எனவும் பின்னர் இறுதி வரைவு வடிவத்தை எட்டுவோம் என்ற எதிர்வு கூறல் குறித்தும் அவர் கடுமையாக விமர்சித்தாராம்.

இது குறித்து அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் தாம் இதனை ஒரு தலைவர் என்ற முறையில் சொல்லவில்லை எனவும் சமசமாஜ கட்சியின் தலைவர் என்ற முறையிலும் அமைச்சர் என்ற முறையிலும் இதனைக் குறிப்பிட்டார் எனப் பதில் அளித்தார் எனவும் அறியமுடிகிறது.

இதேவேளை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதி நிஸாம் காரியப்பர் 'நுவா' கட்சியின்பிரதிநிதி அப்துல் கலாம் ஆகியோர் ஹெல உறுமய கட்சியினர் முஸ்லிம்கள் குறித்து மேற்கொண்டுவரும் கூற்றுக்கள் குறித்துத் தமது வருத்தங்களை வெளியிட்டன எனவும் தெரியவந்தது.

இதேநேரத்தில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவரின் பணிகள் குறித்தும் அவர் முன்னெடுக்கும் நல்நோக்கம் குறித்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதி ஆர்.யோகராஜன், மேலக மக்கள் முன்னணி பிரதிநிதி கலாநிதி குமர குருபரன் ஆகியோர் பாராட்டுக்களைத் தெரிவித்தனர் எனவும் தெரியவந்தது. (க)

## ஐ.தே.கட்சி விலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடத்தப்பட்ட உயர்மட்டக்கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனையின்றி அனைத்துப் பிரதிநிதி ஆலோசனைக்குழுவோ அரசோ சரியான யோசனையை இதுவரை முன்வைக்காததால் இந்தத் தீர்மானம் எடுக்க நேரிட்டது.

அனைத்துக்கட்சி பிரதிநிதிகளால் சரியான யோசனை முன்வைக்கப்பட்டால் அதற்கு நாம் ஆதரவளிப்போம் -என்றார்.

இது தொடர்பாக ஐ.தே.கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா நாயக்க பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியில் கூறியதாவது:-

வெளிப்படையாக இந்த அரசு அனைத்து பிரதி நிதிகள் குழுக் கூட் டங்கள் குறித்து தனது இயலாமையைக் காட்டி வருகின்றது. நாம் இதிலிருந்து முழுமையாக விலகுவதென ஏகமனதாக முடிவெடுத்திருக்கிறோம். ஏனெனில் சர்வதேச சமூகத்தின் முன் முட்டாள்களாகக் எம்மைக் காட்டிக்கொள்ள எமக்கு உடன்பாடு இல்லை. அரசின் இயலாத்தன்மையின் ஓர் அங்கமாக நாம் இருக்க இனிமேலும் விரும்பவில்லை.

மேலும் அரசு மற்றும் ஐ.தே.க. ஏற்கனவே செய்த வரையறைக்குள் இனப்பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை மேற்கொள்ள முன்வருமேயானால் எமது கட்சி இந்த நிலைப்பாடு குறித்து மீள் பரிசீலனை செய்யும் - என்றார். (சி)

## பலாலிப் படைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பில் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் குறித்தோ விவரம் ஏதும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எமது தரப்பில் எந்தப் பாதிப்பும் ஏற்பட வில்லை'' - என்றும் இளந்திரையன் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை வேளை, கோப்பாய் பகுதியிலிருந்து புலிளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மான பூநகரி, முகமாலை, நாகர்கோவில் பகுதிகளை நோக்கி ஆட்லறித் தாக்குதலைப் படையினர் தொடுத்தனர் என்றும் -

பதிலுக்கு புலிகளும் தென்மராட்சியின் மிருசுவில், உசன் நோக்கித் தமது ஆட்லறித் தாக்குதலைத் தொடுத்தனர் என் றும் சில தகவல்கள் தெரிவித்தன. (அ-1)

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இதேவேளை -

கொழும்பில் இரத்மலானையில் இருந்து பயணிகளுடன் வந்துகொண்டிருந்த விமானம், விமானக்கட்டுப்பாட்டுப் பிரிவினரின் அறிவுறுத்தலின்பேரில் புத்தளத்துடன் திருப்பப்பட்டு மீளவும் இரத்மலானை சென்றடைந்தது.

விமானசேவை மீண்டும் நடைபெறுவது குறித்து நேற்றிரவுவரை உறுதியான முடிவுகள் எதுவும் இல்லை என்று விமான சேவை நிறுவனங்கள் தெரிவித்தன.

திருகோணமலைக்கு கப்பலில் பயணம் செய்வதெற்கென யாழ்ப்பாணத்தில் இருந்து பயணிகள் காங்கேசன்துறைக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். (அ-1)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தை அடுத்து இராணுவத்தினரும், வவுனியா முன்னரங்க நிலைகளிலிருந்து கடும் ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை நடத்தினர்என வவுனியா தகவல்கள் தெரிவித்தன. (சி)

## தொடர் ஷெல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை பரவியது.

நகரில் நின்ற பஸ்களும் நகருக்கு அப்பால் சென்றன. சில இடங்களில் வர்த்தக நிறுவனங்களை மூடவும் ஊழியர்கள் தயாராகினர்.

கோட்டைப் பகுதியில் வைத்து பல்குழல் பீரங்கிகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதால், யாழ்.நகரம் அசைந்து நடுங்கியது.

நேற்றைய தாக்குதலால் தீவுப் பகுதிக்கான போக்குவரத்துக்கள் சுமார் 2 மணி நேரம் தடைப்பட்டிருந்தன.

தென்மராட்சி, சாவகச்சேரிக்கான பஸ் சேவைகள் யாவும் யாழ்.ஆஸ்பத்திரி வீதி ஊடாகவே மேற்கொள்ளப்பட்டன.

யாழ். நகரத்தின் நிலை இப்படியிருக்க-

குடாநாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் மக்கள் அச்சமடையும் அளவுக்கு ஷெல் வீச்சுகள் தொடர்ச்சியாகவும் கனதியாகவும் இடம்பெற்றன. அவை சமகாலத்தில் பிரதேச மட்ட இராணுவ முகாம்களில் இருந்து மேற்கொள்ளப்பட்டதால் சகல பிரதேசங்களிலும் மக்கள் பீதி அடைந்தனர். மொத்தத்தில் சுமார் ஒரு மணிநேரம் குடாநாடு தழுவிய ரீதியில் மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் நிலவின.

எனினும் ஒரு மணி நேரத்தில் யாவும் அடங்கி, பதற்றம் நீங்கி மக்கள் தத்தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்டனர்.

இதேவேளை -

குடாக்கடலில் தொழிலுக்கு சென்ற மீனவர்கள் ஷெல் தாக்குதல் காரணமாக இடை நடுவில் கரை திரும்பினர்.

(அ-1-15-68-51)





**SUBRA (14) சித்தன்கேணி**

பேச்சு சிங்களம் by. Prof லீலாகிருஸ்ணன் சிறுவர்களுக்கான விசேட பிரிவு - 23.08.2007 வியாழன் 3.30 பேசுவதற்கு 3 மாதம் சிறப்புப் பயிற்சி 30 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

பிரிவு11

சனி, ஞாயிறு - 7.00 - 8.00

(O/L சிங்களப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள்)

Spoken English by. BRITTO

செவ்வாய் - வியாழன் 7.30-8.30

புதியபிரிவு 23.08.2007 காலை 7.30

ஒருபிரிவில் 50 மாணவர்கள் மட்டும்

**எழுது வினைஞர்கள் தேவை**

அலுவலகக் கட்டமைப்பில் நீண்டகால அனுபவமுள்ள எழுதுவினைஞர்கள் தேவை. நிர்வாக மட்டத்தில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவத்தை நிரூபிக்கவல்ல சான்றிதழ்களும் மற்றும் சிபார்சுசெய்யக்கூடிய இருவரின் நற்சாட்சிப்பத்திர முழுவிவரங்களுடன் நேரில் வரவும். தனியார்துறை அல்லது அரசதுறையில் பணியாற்றியவர்கள் விரும்பத்தக்கது.

ஆளணி முகாமையாளர்,
உதயன் வெளியீட்டகம்,
361,கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### சிவசாமி சிறீதரன்

(சாரதி-டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம்)



ஊர்காவற்றுறை,புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசாமி சிறீதரன் 20.08.2007 திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமிமற்றும் நாமகள் தம்பதியரின் அன்புமகனும் செல்வநாயகம்,புஸ்பராணி,உதயகுமாரி, வசந்தகுமாரி,தவச்செல்வன், திருவருட்செல்வன், யசோதரன் ஆகியோரின் பாசமிகுசகோதரனும் வத்சலா, கணநாதன், இளந்திரையன் (துரை), ரவீந்திரன், விஜிதா, நித்தியவாணி, ரஞ்சனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2007) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரதுஇல்லத்தில் நடைபெற்று பூதவுடல் புளியங்கூடல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல் தெற்கு,
ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.